

வெல்லும் தமிழ் பெண்கள் தி.மு.க. மகளிர் அணி டெல்டா மண்டல மாநாடு வரும் 26 ம் தேதி தஞ்சை அருகே உள்ள செங்கிப்பட்டியில் பிரமாண்டமாக நடைபெற உள்ள நிலையில் அதன் முன்னேற்பாடு பணிகள் குறித்து கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. பின்னர் மாநாட்டு பணிகளை பார்வையிட்டனர். இதில் அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், எஸ்.ரகுபதி, கோவி.செழியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, டி.ஆர்.பி ராஜா, எஸ்.எஸ். சிவசங்கரன், சி.வி.கணேசன், சிவ.வீ. மெய்யநாதன், மாவட்டச் செயலாளர்கள் துரை.சந்திரசேகரன், பூண்டி கே.கலைவாணன், சாக்கோட்டை க.அன்பழகன், தி.பழநிவேல், கே.கே. செல்லபாண்டியன், வைரமணி, என்.கௌதமன், நிவேதா எம்.முருகன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சு.கல்யாணசுந்தரம், ச.முரசொலி, முன்னாள் எம்பி, செ.இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், கா.அண்ணாதுரை, என்.அசோக்குமார், பன்னீர்செல்வம், முத்துராஜா, மேயர் சண் .இராமநாதன், துணை மேயர் அஞ்சுகம்பூபதி, உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### தஞ்சையில் ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’

# தி.மு.க. மகளிர் அணி டெல்டா மண்டல மாநாடு ஆலோசனைக் கூட்டம்!

## கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு தலைமையில் அமைச்சர் பெருமக்கள் பங்கேற்பு!

தஞ்சாவூர், ஜன. 20 -

“வெல்லும் தமிழ் பெண்கள்” தி.மு.க. மகளிர் அணி “டெல்டா மண்டல மாநாடு” வரும் 26 ம் தேதி தஞ்சை - திருச்சி தேசிய நெடுஞ்சாலை திருமலை சமுத்திரத்தில் ஊராட்சியில் பிரமாண்டமாக நடைபெற உள்ள நிலையில் அதன் முன்னேற்பாடு பணிகள் குறித்து கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. வரவேற்புரையாற்றினார்.

அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.ரகுபதி, முனைவர் கோவி.செழியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, டி.ஆர்.பி ராஜா, எஸ்.எஸ். சிவசங்கரன், சி.வி.கணேசன், சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அதனை தொடர்ந்து கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என். நேரு தலைமையேற்று சிறப்புரையாற்றினார்.

அதில் அவர் கூறியதாவது: வெல்லும் தமிழ் பெண்கள் தி.மு.க. மகளிர் அணி மாநாடு வரும் 26ம் தேதி தஞ்சை அருகே உள்ள செங்கிப்பட்டியில் சுமார் 1.25 லட்சம் பேர் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் மாநாட்டின் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் தற்போது நடைபெற்றுகொண்டிருக்கிறது. மாநாடு அன்று குறித்த நேரத்தில் பங்கேற்க வேண்டும். அந்தந்த மாவட்டத்திற்கு தனி தனி பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. வாகனங்கள் நிறுத்த தனி தனி பகுதிகள் ஏறுபாடு செய்யப்பட்டுள்ளது. மகளிர் பாதுகாப்பாக அழைத்து வந்து அழைத்து செல்ல அறிவுறுத்தினார்.

பின்னர் மாநாடு பணிகள் குறித்து பந்தல் சிவா அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்களிடம் விவரித்தார். மாநாடு பந்தலையும், சாலை வசதிகளையும் பார்வையிட்டனர்.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள் பொறுப்பாளர்கள் பூண்டி கே.கலைவாணன், சாக்கோட்டை க.அன்பழகன், தி.பழநிவேல், கே.கே.செல்லபாண்டியன், திருச்சி வைரமணி, என்.கௌதமன், நிவேதா எம்.முருகன், ஜெகதீசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சு.கல்யாணசுந்தரம், ச.முரசொலி, முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், கா. அண்ணாதுரை, என்.அசோக்குமார், பன்னீர்செல்வம், முத்து ராஜா, தஞ்சை மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் அஞ்சுகம்பூபதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எம்.இராமசந்திரன், து.செல்வம், சி.இறைவன், தஞ்சை மத்திய மாவட்டக் கழக நிர்வாகிகள் எல்.ஜி. அண்ணா, கனகவள்ளி, உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் செய்தியாளர்களுக்கு அமைச்சர் கே.என்.நேரு அளித்த பேட்டியில் ‘வெல்லும் தமிழ் பெண்கள்’ டெல்டா மண்டல மகளிர் மாநாடு பிரமாண்ட முறையில் நடைபெற உள்ளது.. அமைச்சர்கள், மாவட்ட செயலாளர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கினர்.. எல்லாருக்கும் எல்லாம் என்ற வகையில் மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைய மண்டல மாநாடு நடைபெற உள்ளது.. திமுக தேர்தல் அறிக்கைக்கு முன்னதாக அறிவிக்க வேண்டும் என்பதற்க்காக அவசரம் அவசரமாக எடப்பாடி பழனிச்சாமி திமுகவின் திட்டங்களை காப்பி அடித்து வெளியிட்டுள்ளார்.. திமுக தேர்தல் அறிக்கையின் போது அரசிடம் பணம் இல்லை நிறைவேற்ற முடியாது என்றார், ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் மகளிர் உதவித் தொகை, பொங்கலுக்கு 3000 பரிசுத்தொகை, மாணவர்களுக்கு லேப்டாப் என தொடர்ந்து வழங்கினார்.

பெண்கள் வேலைக்கு செல்ல வேண்டும், பெண்கள் முன்னேற வேண்டும் என உரிமைத் தொகை நாங்கள் வழங்கினால் எடப்பாடி பழனிச்சாமி ஆண்களுக்கு வழங்குவோம் என்கிறார்.. திமுக தேர்தல் அறிக்கையில் இன்னும் பல சிறப்பான திட்டங்கள் இடம்பெறும் என்றார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு, கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பில், கரூர், வேலுச்சாமிபுரம் ஈரோடு சாலையில், மொத்த பரிசுத்தொகை ரூ. 2,12,000/ மற்றும் கோப்பைகளுக்கான மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்து, வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுத் தொகையும் வெற்றி கோப்பைகளும் வழங்கினார். எம்.எல்.ஏக்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி மற்றும் கழக நிர்வாகிகள் அருகில் உள்ளனர்.




தஞ்சை வடக்கு மாவட்டம் கும்பகோணம் மாநகர தி.மு.க. சார்பில் காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு நூல் அறிமுக நிகழ்ச்சி மற்றும் திராவிட பொங்கல் விழாவில் மூத்த ஊடகவியலாளர் தி.செந்தில் வேல் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தாட்கோ தலைவர், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ந.இளையராஜா, மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி. அய்யாராசு, ஜெ.நடராஜன், ந.ஜெயலெட்சுமி, மாநில இலக்கிய அணி துணை செயலாளர் ஆடுதுறை மு.உத்திராபதி, இளம் பேச்சாளர்கள் திருவாரூர் கனிமொழி, சொல்லருவி தீன்ஷா நூப், வழக்கறிஞர் ம.மோகநிதி, மாநகரக் கழக நிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், எஸ்.ரவிசந்திரன், எம்.சிவானந்தம், டி.செந்தாமரை, பகுதிச் செயலாளர்கள் மு.கண்ணன், இரா.செல்வராஜ், இரா.கல்யாணசுந்தரம், டி.வி.கிருஷ்ணமூர்த்தி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பட்டத்திக்காடு மற்றும் கரு.வடதெரு பகுதிகளில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் புதுக்கோட்டை நெடுஞ்சாலை (நபார்டு) மற்றும் கிராமசாலைகள் மூலம் புதிதாக அமைக்கப்படவுள்ள தார்ச்சாலை அமைக்கும் பணிகளுக்கு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் 18.01.2026 அன்று அடிக்கல் நாட்டினார்கள். உடன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் கே.மாரிமுத்துவின்தாயார் மறைந்த தங்கம்மாள் உடலுக்கு இரா.முத்தரசன் ,தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, நகர்மன்ற தலைவர் மன்னை சோழராஜன் ஒன்றிய செயலாளர்கள் பால. ஞானவேல், வீ.எஸ்.ஆர்.தேவதாஸ் அறங்காவல் குழு தலைவர் இளவரசன் மற்றும் மாநில, மாவட்ட,ஒன்றிய,நகர,பேரூர் கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய சாலைப் பணிகள்!

## அமைச்சர்கள் எஸ்,ரகுபதி – சிவ,வீ,மெய்யநாதன் மற்றும் கே,கே,செல்லப்பாண்டியன் அடிக்கல் நாட்டினர்!

புதுக்கோட்டை, ஜன. 20 -

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பட்டத்திக்காடு மற்றும் கரு.வடதெரு பகுதிகளில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் புதுக்கோட்டை நெடுஞ்சாலை (நபார்டு) மற்றும் கிராமசாலைகள் மூலம் புதிதாக அமைக்கப்படவுள்ள தார்ச்சாலை அமைக்கும் பணிகளுக்கு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் 18.01.2026 அன்று அடிக்கல் நாட்டினார்கள்.

முதலமைச்சர் அவர்கள் மக்கள் நலனையே மையமாகக் கொண்டு, அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, கிராமங்களையும் நகரங்களுக்கு இணையாக வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் வகையில் தொலைநோக்குப் பார்வையுடன் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை சந்தைக்கு கொண்டு செல்லவும், மாணவர்கள் கல்வி நிறுவனங்களுக்கு பாதுகாப்பாகச் செல்லவும், பொதுமக்கள் அன்றாட தேவைகளுக்காக எளிதில் பயணிக்கவும் கிரமப்புற ங்களில் சாலை வசதிகளை மேம்படுத்திடும் வகையில் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அந்தவகையில், புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பட்டத்திக்காடு பகுதியில் புதுக்கோட்டை பட்டுக்கோட்டை சாலை முதல் கருக்காகுறிச்சி செல்லும் சாலைக்கு ரூ.7.76 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள தார்ச்சாலை அமைக்கும் பணி, கரு.வடதெரு பகுதியில், திருமணஞ்சேரி முதல் கருக்காகுறிச்சி பகுதிக்கு ரூ.4.58 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள தார்ச்சாலை அமைக்கும் பணி ஆகிய பணிகளுக்கு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்த ப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் அடிக்கல் நாட்டினார்கள்.

இதன் மூலம் இப்பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்படுவதுடன், விவசாயிகள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் அன்றாட தேவைகளுக்காக எளிதில் பயணிக்க வாய்ப்பாக அமையும். இப்பணிகள் விரைவாகவும், தரமான முறையிலும் நிறைவேற்றப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முன்னதாக புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டம், வடமலாப்பூர் கிராமத்தில் நடைபெற்ற ஜல்லிக்கட்டுப் போட்டியினை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்த ப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர் துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வில் முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு. வை.முத்துராஜா, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா,

மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திரசேகரன், வெ.முத்துக்கிருஷ்ணன், மு.க.ராமகிருஷ்ணன் மற்றும் ராமச்சந்திரன், பூங்குடிசிவா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி,மாரியம்மன் கோவில் திடலில் திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கும் நவீன நாடகம்,உள்ளிட்ட மாபெரும் கலை நிகழ்ச்சிகள் விழா தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் நடைப்பெற்றது.இந்நிகழ்ச்சியில், மாவட்ட அவைத்தலைவர் கே.மனோகரன்,சி.முத்துக்குமார், பி.எஸ்.சரவணன்,சிவப்பிரகாசம், சித்தார்த்தன்,மூத்தவழக்கறிஞர்.டி.சந்திரசேகர்,மற்றும் ஒன்றிய, பேரூர்,கிளை,வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள்,சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தர்மபுரி மேற்கு மாவட்டம் ஜிட்டாண்டஅள்ளியில் திராவிட சமத்துவ பொங்கல் விழா காரிமங்கலம் மேற்கு ஒன்றிய செயலாளர் எம்வீடி. கோபால் தலைமையில் நடைபெற்றது. விழாவில் மாநில நிர்வாகி சூடப்பட்டி.சுப்பிரமணி,பாலக்கோடு தேர்தல் பொறுப்பாளர் அரியப்பன்,மூத்த வழக்கறிஞர் டி. சந்திரசேகர்,ஹரிபிரசாத்,முனிராஜ்,மாதேஸ்வரன்,மணி பாக்யராஜ்,யுவராஜ்,சிவாஜி, உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.